# சிறுவர் குரல்

குரல் - 01 (ஆகஸ்ட் அக்டோபர் 2005) தொனி - 02



Funded by save the Children in Sri Lanka

அன்பளிப்பு kalsari


வெளியீடு
அரும்புகள் சிறுவர் கழகம்
இளந்தளிர் சிறுவர் கழகம்
சிறகுகள் சிறுவர் கழகம்
தென்றல் சிறுவர் கழகம்
தேன் தமிழ் சிறுவர் கழகம்
வளர் பிறை சிறுவர் கழகம்

உதவி
விழி உளசமூக மேம்பாட்டு அமையம்



ஆசிரியர் குழு
அ. நிறோஜினி
கி. லிலிமலர்
சே. நிலோஜினி
த. தர்சன்
கு. செலஸ்ரீன்
பீ. பியூட்சன்
அ. றொ அனோஜன்


**அட்டைப்படவிளக்கம்**

குழந்தாய்! அப்படியென்ன
பார்த்துக் கொண்டிருக்கின்றாய்
உங்கள்
ஆர்வம் தான் என்ன அற்புதம்
விருப்பம் எமக்கு புரிகிறது
சொல்லுங்கள் எம்மிடம்
நிறைவேற்றுவோம்.
பெற்றோராய்
ஆசிரியராய்
அன்புடையோராய்


கணனி வடிவமைப்பு
செல்வி. ஆ. தர்சினி


## புரிந்து கொள்ள முடியுமா எங்களையும்

உலகெங்கிலும் சிறுவர்கள் உள்ளபோதும் ஒருவராவது எமது குரல்களுக்குசெவி சாய்ப்பதும் இல்லை எம்மை எமது உணர்வுவலைகளை புரிந்து கொள்வதும் இல்லை. எமது குரலையும் எமது உணர்வுகளையும் வெளியே தெரியப்படுத்த விரும்பினோம். அதன் விளைவாக எமது வெளிப்பாடாக இந்த சிறுவர் குரல் சஞ்கையை வெளியிடுகிறோம்.

எமது உணர்வுள்ள கருத்துக்களை தாங்கி வரும் நல்ல ஊடகமான சிறுவர் குரல் இரு மாதத்திற்கு ஒருமுறை வெளிவர வேண்டியது ஆனால் போதிய ஆக்கங்கள் உரிய காலத்தில் வந்து சேராத காரணத்தினால் இது பிந்திய வெளியீடாக பிரசுரமாகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இச்சஞ்சிகை வெளியீட்டுக்கான நிதி உதவியை இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் (SCiSl) வழங்கு கிறது இந்நிறுவனம் விழி அமையம் ஊடாக எமக்கு வழங்கும் உதவிகளுக்கு எமது மன மார்ந்த நன்றிகள் .

ஒவ்வொரு சிறுவர்களினதும் உணர்வுகளின் எண்ணங்களின் வெளிப்பாடாக திகழும் இந்த சஞ்சிகையை யாவரும் வாசித்துப் பயன் பெறுவதுடன் உங்கள் கருத்துக்கள் உணர்வுகளை ஆக்கங் களாக எமக்கு உரிய கால நேரத்தில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். அடுத்த சஞ்சிகை வெளியீட்டின் முடிவு உங்கள் ஒவ்வொருவரதும் கைகளிலே உள்ளது.

- ஆசிரியர் குழு

## பொருளடக்கம்

1. கல்வியின் சிறப்பு
2. முயற்சி
3. குழந்தைகளின் கேள்விகளில் மறைந்திருக்கும் அர்த்தங்கள்
4. நட்பு 5. அன்பு 5. முன்றெழுத்து
5. தாயின் பாசம்
6. சொந்தம்
7. அன்பின் சின்னம்
8. வேண்டாம்
9. காத்திரு
10. சமாதானம்
11. சிரிப்பு வெடிகள் சில
12. குடையின் சுயசரிதை
13 அன்னை மடியில் மீண்டும்
14. வேண்டாம்
15. பொங்கி எழும் சிறுவர்கள்
16. கல்வி
17. சிறுவர்கள் உலகம்
18. சிறுவர் கதை
19. தாயவள்
20. எங்கள் அம்மா அப்பாவை
21. பள்ளி வாழ்க்கை
22. இராட்சத அலை
23. என் அன்பு அன்னை
25. அம்பிகை நகர் இளத்தளிர் சிறுவர் கழகம்
26. பொன் மொழிகள்
27. பொது அறிவு
28. ஆங்கிலக் கல்வியின் நோக்கம்
29. பிரிந்த உறவுகள்
30. நான்கு சகோதரர்கள்
31. விடுகதைகள்
32. பொது அறிவு
33. கவி நயம்
34. சிறுவர்களின் உல்லாசம்
35. வீண் பெருமை
36. கொண்டாட்டம்
37. பொது அறிவு
38. சிந்தனைத் துளிகள் சில
39. சுனாமி பற்றிய சில கருத்துக்கள்

40. ஏற்புடன் வாழ்வோம்.
41. இனியும் நீ வரவேண்டாம் சுனாமியே
42. கடினம் நண்பா
43. பூவே
44. சமாதானம்
45. சுனாமி
46. நகைச்சுவைத் துணுக்கு
47. நட்பு
48. ஆழம் அறியாது காலை விடுதல்
49. மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாகாது
50. பயனற்ற உரையாடல்கள்

# கல்வியின் சிறப்பு

உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச் செல்வம் மற்றது பொருட்ச் செல்வம். பொருட்செல்வம் பிறருக்கு கொடுக்கும் தோறும் குறைவுபடும். நீராலும் நெருப்பாலும் அளியக் கூடிய பிறரால் கவரக் கூடியது. ஆனால் கல்விச் செல்வமோ அளிவற்றது. நீராலோ நெருப்பாலோ அளியாது.

கள்வரால் கவர முடியாது. பிறருக்கு கொடுக்கும் போது பெருகிக் கொண்டே செல்லும். இதனால்த்தான் கல்விச் செல்வத்திற்கு நிகரான செல்வம் வேறு இல்லை என்றும் நம் முன்னோர் போற்றுகின்றனர்.

மனிதரிடத்திருள்ள அறியாமையைப் போக்கி அறிவு ஒளிவூட்டுவது கல்வி கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. கற்றறிந்தவனோ கண்ணுடையோன் எனக் கருதுவான். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டியவற்றைக் கற்று கற்றறிந்த நெறியின்படி "கற்க கசடற கற்ற பின் நிற்க அதற்கு தக" என்றார். கற்கவேண்டியவற்றை நாம் கருத்தூன்றிக் கற்க வேண்டும். கற்பதற்கு வேண்டிய பருவத்தில் கற்க வேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து".

**ஆக்கம்**: றோய்ஸ்

கியூடெக் சிறுவர் கழகம்

# முயற்சி

புதருக்குள் பதுங்கியிருந்த முயல் ஒன்றை வெளியேற்றி அதைச் சிறிது தூரம் துரத்திச் சென்றது வேட்டை நாயொன்று. ஆனால் முயல் தன்னால் முடிந்தவரை ஓடித் தப்பிச் சென்று விட்டது. அந்த வழியே வந்துகொண்டிருந்த இடையன் இதை அவதானித்தான்.

இருவரில் முயல்தான் மிக சிறந்த ஓட்டக்காரன் என்று கூறியதுடன் நாயைக் கேலி செய்தான். ஒரு பிராணி தனது இரவு உணவிற்காக ஓடிக் கொண்டிருந்தது. மற்றைய பிராணி தனது உயிரைக் காப்பாற்றுவதற்காக ஓடிக் கொண்டிருந்தது என்று வேட்டை நாய் கூறியது.

ஆக்கம் ஜே.கில்பேட்
தென்றல் சிறுவர் கழகம்.

பெற்றாருக்கும் ஆசிரியருக்கும்

# குழந்தைகளின் கேள்விகளில் மறைந்திருக்கும் அர்த்தங்கள்...

குழந்தைகளுடன் உரையாடுவது ஒரு தனிக்கலை. அதற்கு அதற்கே உரிய சட்ட திட்டங்களும், அர்த்தங்களும் உண்டு. குழந்தைகள் பெரும்பாலும் தமது உரையாடல்களின் போதும், அபிப்பிராயங்களைத் தெரிவிக்கையிலும் மிகவும் சாதுர்யமாகவே நடந்து கொள்கின்றனர். அவர்களது செய்திகள் பெரும்பாலும் பூடகமானவை: சங்கேதத் தன்மை வாய்ந்தவை: கவனமாக மொழி பெயர்க்கப்பட வேண்டியவை.

ஆண்டி என்ற பத்து வயதுக் குழந்தை தனது தகப்பனிடம் இவ்வாறு கேட்டான்:
'ஹாலெம் நகரில் உள்ள கைவிடப்பட்ட சிறுவர்களின் தொகை என்ன?
ஒரு இரசாயனவியலாளரும் புத்திஜீவியுமான தகப்பனாருக்கு அந்தக் கேள்வி மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது. சமூகப் பிரச்சினைகளில் தனது மகனுக்கு உள்ள அக்கறை அவருக்கு சந்தோஷமுட்டியதில் வியப்பில்லை. அவர் மகனுக்கு அது தொடர்பாக நீண்ட விளக்கம் ஒன்றை அளித்து விட்டு அவனை நோக்கினார். ஆனால் அவனோ திருப்தியுற்றவனாகத் தெரியவில்லை. அதே விடயம் தொடர்பாக அவன் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தான்.
"நியூயோர்க் நகரத்தில் எத்தனை குழந்தைகள்?",
"முழு அமெரிக்காவிலும் எத்தனை பேர்",

"முழு உலகத்திலும்........?"

இறுதியில் தான் தனது மகனுடைய அக்கறை ஒன்றும் சமூகம் பற்றியதல்ல. தனிப்பட்ட ஒன்று என்று புரிந்தது தகப்பனாருக்கு. கைவிடப்பட்ட சிறுவர்கள் மீதான அனுதாபத்தின் காரணமாக அவன் அந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. அவனது கேள்வி 'நானும் கைவிடப்பட்ட சிறுவர்களில் ஒருவனாகி விடுவேனோ' என்ற அச்சத்திலிருந்து எழுந்தது. அவன் எதிர்பார்த்தது, கைவிடப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை அல்ல. உண்மையில், தானும் கைவிடப்பட்ட சிறுவர்களில் ஒருவனாகி விடமாட்டேன் என்பதை உறுதி செய்து கொள்வதே அவனது நோக்கமாக இருந்தது.

ப்ரூஸ் ஐந்து வயதுச் சிறுவன். ஆவன் முதன் முதலாக பாலர் பள்ளிக்குப் போயிருந்த போது, கூட வந்திருந்த அம்மாவிடம் அங்கிருந்த சுவரில் வரையப்பட்டிருந்த ஓவியங்களைச் சுட்டிக் காட்டி இவ்வாறு கேட்டான்:

"யார் இந்த அசிங்கமான படங்களை வரைந்தது?"

தாயாருக்கு தர்மசங்கடமாகிப் போய் விட்டது. அவள் மகனை அப்படிப் பேசக் கூடாது என்று கண்டிப்பது போல பார்த்தபடி மெதுவாகக் கிசுகிசுத்தாள்:

"இவ்வளவு அழகான படங்களை அசிங்கமென்று சொல்வது சரியல்ல."

ஆனால் ஆசிரியருக்கு அவனது கேள்வியின் அர்த்தம் புரிந்து விட்டது. அவர் புன்னகைத்தபடியே சொன்னார்:

'நீங்கள் இங்கே அழகான படங்களைத்தான் வரையவேண்டுமென்றில்லை. உங்களுக்கு விருப்பமானபடி நீங்கள் வரையலாம்.......,

ப்ரூஸின் முகத்தில் பெரிய புன்னகையொன்று தோன்றியது. அவனுக்கு, அவனது மனதில் புதைந்திருந்த கேள்விக்குரிய பதில் இப்போது கிடைத்து விட்டது: ஒரு சிறுவன் அழகான படங்களை வரையாமல் விட்டால் என்ன நடக்கும்?'

அடுத்ததாக ப்ரூஸ் அங்கிருந்த ஒரு உடைந்த விளையாட்டு தீயணைக்கும் இயந்திரத்தை எடுத்து நேரடியாகவே கேட்டான்.

'இதை உடைத்தது யார்?

' இதை யார் உடைத்திருந்தால்த்தான் என்ன? இங்கு இருப்பவர்கள் எவரையும் தான் உனக்குத் தெரியாதே ஏன் தான்

இப்படிக் கேட்கிறாய்?'

உண்மையில் ப்ருஸின் நோக்கம் பெயர்களை அறிவதல்ல. அவனுடைய நோக்கமெல்லாம் விளையாட்டுப் பொருட்களை உடைப்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பது தான். கேள்வியைப் புரிந்து கொண்ட ஆசிரியர் சரியான பதிலைத் தந்தார்.

'விளையாட்டுப் பொருட்கள் விளையாடுவதற்குத் தானே? அவை சில வேளைகளில் உடையும். இது நடக்கக் கூடிய ஒன்று தானே.'

ப்ருஸ் திருப்தியாக தலையாட்டினான். அவனது கேள்வி கேட்கும் திறமை அவனுக்குத் தேவையான தகவலைப் பெற்றுத் தந்தது.

'இந்தப் பெரியவர் (ஆசிரியர்) நல்லவர். இவர் விரைவில் கோபமடைய மாட்டார். ஒரு படம் மோசமாக வரையப்பட்டாலோ, ஒரு விளையாட்டுப் பொருள் உடைந்தாலோ அவர் கோபமடையப் போவதில்லை. நான் பயப்பட வேண்டியதில்லை. இங்கே தங்குவதில் எந்தப் பயமும் இல்லை!'

ப்ருஸ் தாயாருக்கு கைகாட்டி விட்டு தனது பாலர் பாடசாலையின் முதல் நாளை ஆரம்பிக்கத் தொடங்கினான்.

கரோல் பன்னிரண்டு வயதுச் சிறுமி. அவள் மிகவும் வேதனை அடைந்தவளாக, கண்ணீர் மல்க நின்றிருந்தாள். அவளது விருப்பத்துக்குரிய மைத்துனி அவளை விட்டு விட்டு கோடை கால விடுமுறைக்காக தனது வீட்க்குப் போகப் போகிறாள்.

கரோல்: (கண்ணீர் மல்க): சுசி போகப் போகிறாள் நான் திரும்பவும் தனிமையில் இருக்கப் போகிறேன்.

தாய் : உனக்கு இன்னொரு சினேகிதி கிடைப்பாள்.

கரோல்: நான் சரியாக தவிச்சுப் போவேன்.

தாய் : உனக்கு அது பழகிப் போய்விடும்.

கரோல்: ஓ........ அம்மா (அழுகிறாள்)

தாய் : உனக்கு பன்னிரண்டு வயதாகி விட்டது. இன்னும் ஒரு அழுகுணிப் பாப்பாவாக இருக்கிறாய்.

கரோல்: தாயை முறைத்துப் பார்த்து விட்டு தனது அறைக்குள் ஓடிப் போய் கதவை மூடிக் கொண்டாள்.

இந்தச் சம்பவம் ஒரு சந்தோஷமான முடிவுக்கு வந்திருக்க

முடியும். ஒருகுழந்தையின் உணர்வு எமக்கு அது ஒன்றும் முக்கியத்துவம் அல்லாததாக இருப்பினும் கூட மிகவும் காத்திரமான அக்கறைக்குரிய ஒன்றாகக் கருதப்பட வேண்டும். கோடைகால விடுமுறைப் பிரிவு ஒரு தாயின் கண்ணில் அழுது கவலைப்படுமளவுக்கு முக்கியமற்ற சின்ன விடயமாக இருக்கலாம். ஆனால் அதற்காக தாய் காட்ட வேண்டிய அனுதாபம் சிறியதாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

'கரோல் சரியான கவலையாக இருக்கிறாள். அவளைக் கவலைப்படுத்துவது என்ன என்பதை நான் விளங்கிக் கொள்கிறேன்' என்று காட்டுவதன் மூலம் அவளுக்கு என்னால் உதவ முடியும் என்று தாய் நினைத்திருந்தால் இப்படிக் கூறியிருக்க முடியும்:

"சுசி இல்லாமல் தனிமையாக இருக்கும் என்ன?"

"உனக்கு அவளில்லாதது சரியான கவலையாக இருக்கும் என்ன?"

"ஒன்றாக இருந்த ஒருவரைப் பிரிந்து இருப்பது என்பது கஷ்டமான ஒன்றுதான்........"

"அவள் இல்லாவிட்டால் உனக்கு வீடே வெறிச்சென்று இருக்கும் என்ன?"

இத்தகைய அணுகுமுறை பெற்றோருக்கும் குழந்தைகட்கும் இடையில் அன்னியோன்யத்தை வளர்க்கும். குழந்தை தனது கவலை புரிந்து கொள்ளப்படுவதாக உணரும் பட்சத்தில் அதன் துயரம் இல்லாது போய்விடும். ஏனென்றால் அவர்கள் விளங்கிக் கொள்ளப்படுகிறார்கள். தாய் மீதான அவர்களது அன்பும் இதனால் ஆழமாகிறது. ஏனென்றால் அவள் விளங்கிக் கொள்கிறாள். தாயின் அனுதாபம் உணர்வுபூர்வமான முறையில் அவர்களது ஆளுமையைத் தட்டிக் கொடுக்கிறது.

(தொடரும்)

நன்றி

Dr.Haim G Inod எழுதிய

"குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே..."

என்ற நூலானது குழந்தைகள் தம் மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் அவர்களை எவ்வாறு நாம் கையாள முடியும் என்பதையும் மிகவும் எளிமையாக எடுத்துரைக்கிறது. பெற்றோர்களும் ஆசிரியர்களும் மற்றவர்களும் பிள்ளைகளை விளங்கிக்கொள்ளவும் சிறப்பான முறையில் அவர்களை வளர்த்தெடுக்கவும் இந்நூல் உதவுமென நாம் கருதுகிறோம்.

சிறுவர்குரல் இதனை தொடராகத் தரும் என்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.

# நட்பு

நட்பு............
சாதாரணமாகத்தான் இருந்தது
எனக்கு உன்னைக் காணும் வரை
ஏதேனும் எதிர்பார்ப்புக்களுடனே
அன்பு காட்டும் உலகில்
எந்த எதிர்பார்ப்பும் இல்லா
உன் அன்பை எண்ணி
வியந்து போகிறேன்.

தோழியே!
மொழிகளோ.......
தூரங்களோ.......வயதோ மாற்றம் எதுவுமே
நட்பை நிர்ணயிப்பதில்லை
உன்னாலே புரிந்து கொண்டேன்.

என் வாழ்க்கைத் தோட்டத்தில்
எத்தனையோ நட்புப் பூக்கள்
ஆனால் உன் நட்பைப் போல்
எதுவும் மலர்ந்து மணம் வீசுவதில்லை

கால வெள்ளத்தில் சிதறுண்டு
போகும் உறவுகளில் தோழியே.......
தொடர்வாய் உன் நட்பை.

**ஆக்கம்**
அ.லூாட்ஸ் பிறின்சா
**தென்றல் சிறுவர் கழகம்**

# அன்பு

மூன்றெழுத்தாலானவன் இவன்
மூவுலகை ஆழ்பவன் ஈன்றெடுத்த
இதயங்களுக்கு தேன் சொரியும்
மலரைப் போன்றவன்

மன்னவன் இவன் மாண்பு உள்ளவன்
சின்னவன் ஆகிய இவனுக்கு
உருவங்கள் இல்லை இல்லை
உடமைகள் உண்டு

நன்மைகள் உண்டு
பொல்லாதவரையும் நல்லவன் ஆக்குவான்
இருள் என்னும் அகந்தையை அழித்து
இதயத்தில் ஒளி வீசுவான்

ஒளியைக் கொடுக்கும் இவனுக்கு யாரும்
இல்லை அன்பு என்ற அன்புள்ள
நாயகனே உனக்கு எக்காலமும்
நன்றியுடையவனாய் இருப்பேன்

**ஆக்கம்**

அ.ஆன் டிக்சன்

**தென்றல் சிறுவர் கழகம்**

## மூன்றெழுத்து

மூன்றெழுத்து வந்து
உறவு என்னும்
மூன்றெழுத்தைக் கண்டு
அழிவு என்னும்
மூன்றெழுத்தைக் தந்து
பிரிவு என்னும்
மூன்றெழுத்தை சந்தித்தோம்

ஆக்கம்
யூ.நிருபாதரன்
அரும்புகள் சிறுவர் கழகம்

## தாயின் பாசம்

பாசமென்னும் கருவறையின்
பத்து மாதம் சுமந்து
அன்பென்னும்
உணர்வை ஊட்டி அன்போடு பார்த்து
ஈ, எறும்பு தீண்டாமல்
இரவு பகல் விழித்து
தன் கண்களைப் போல்
கண்மணியாய் என்னைப் பார்த்து
தன்னையே உருக்கி எனக்கு
ஒளி தந்த மெழுகுவர்த்தியாய்
உருகும் தாய்

ஆக்கம்
யே.சுலக்சன்
தென்றல் சிறுவர் கழகம்

# சொந்தம்

உடலுக்கு உயிர் சொந்தம்
உறவுக்கு அன்பு சொந்தம்
பூவுக்கு மணம் சொந்தம்
பூவைக்கு அடக்கம் சொந்தம்
கவிக்கு அறிவு சொந்தம்
கற்பதற்கு ஆசான் சொந்தம்
பண்புக்கு மரியாதை சொந்தம்
தாய்க்கு சேய் சொந்தம்
சேய்க்கு தாய் சொந்தம்

ஆக்கம்
ச.சசிகலா
தென்றல் சிறுவர் கழகம்

# அன்பின் சின்னம்

நாட்டை அன்பு செய் நல்ல பிரஜையாவாய்
பெற்றோரை அன்பு செய் பாசத்தை அறிவாய்
குருவை அன்பு செய் அறிவைப் பெறுவாய்
நாட்டை அன்பு செய் நல்ல நண்பனை அடைவாய்
இயற்கையை அன்பு செய் கவிஞனாவாய்
இறைவனை அன்பு செய் சொர்க்கத்தை அடைவாய்

ஆக்கம்
அ.லூட் பிரசின்னா
தென்றல் சிறுவர் கழகம்

# வேண்டாம்

பணிவில்லாப் பண்பு வேண்டாம்
பொய்யான உள்ளம் வேண்டாம்
மன்னிக்கா மனம் வேண்டாம்
பகைமையான பாசம் வேண்டாம்
நன்றியில்லா நட்பு வேண்டாம்
உதவா உள்ளம் வேண்டாம்
வறுமையான வாழ்வு வேண்டாம்
அடக்கமில்லா அமைதி வேண்டாம்
சமாதானமில்லா சமூகம் வேண்டாம்

**ஆக்கம்**
அ.லூட்பிரிசின்னா
**தென்றல் சிறுவர் கழகம்**

# காத்திரு

கடல் அலை வருமென மண் காத்திருக்கும்
மழை வருமென பயிர் காத்திருக்கும்
மீன் வருமென வலை காத்திருக்கும்
அலை வருமென படகு காத்திருக்கும்
பறவை வருமென மரம் காத்திருக்கும்
வண்டு வருமென பூ காத்திருக்கும்
காற்று வருமென பட்டம் காத்திருக்கும்
அன்பு வருமென பிள்ளை காத்திருக்கும்
மாணவ மாணவிகளே நீங்கள்
வருவீர்கள் என்றும் கல்வி காத்திருக்கும்

**ஆக்கம்**
R.X.G.சாள்ஸ்
**தென்றல் சிறுவர் கழகம்**

# சமாதானம்

நித்தம் நிலவும் யுத்தம் வேண்டாமடா
நிலையான சமாதான வாழ்வு வேண்டுமடா
நிலவும் யுத்தம் ஒளிய வேண்டுமடா
நித்தம் இறைவனை துதித்திட வேண்டுமடா

அன்பு என்னும் கடலில் மூழ்கிடடா
சமாதானத்தை நிலை நாட்டிடடா
நித்தம் மகிழ்வு வேண்டுமடா
சமாதானமே நமது வாழ்வின் வெற்றியடா

ஐந்தறிவு படைத்த காக்கை இனத்தைப் பாரடா
அவற்றின் குணத்தை கற்றிடடா
ஆறறிவு படைத்த மனிதனைப் பாரடா
ஆவியில் அவமான சின்னத்தைப் போக்கிடடா

**ஆக்கம்**
இ.பிரியதர்ஷினி
**தென்றல் சிறுவர் கழகம்**

# *சிரிப்பு வெடிகள் சில.....*

சற்று பைத்தியங்களை ஏற்றியவாறு விமானம் ஒன்று புறப்பட்டது. விமானம் புறப்பட்டதும் பைத்தியங்கள் எல்லாம் கூச்சலிட்டு கும்மாளம் அடித்தன. அதனைக் கண்ட விமான ஓட்டினர் ஒரு பைத்தியத்தை அழைத்து என்ன சத்தம்? எல்லோரையும் சத்தம் போடாமல் அமைதியாய் இருக்கச் சொல்லு என்றார். சற்று நேரத்தின் பின் ஒரு சத்தத்தையும் காணவில்லை உடனே விமான ஓட்டினர் தான் முதலில் அழைத்த பைத்தியத்தை அழைத்து என்ன இவ்வளவு அமைதியாய் இருக்கிறது? நீா என்ன சொன்னனீர்? நான் கதைக்கிறவர்களை வெளியால போய்

கதைக்கச் சொன்னனான். அதுதான் எல்லோரும் கதைக்க போய்விட்டார்கள்.

சில பைத்தியங்களுக்கிடையில் ஒரு போட்டி நடந்தது அந்தப் போட்டியானது அவர்கள் ஒரு பொருளின் பெயரை சரியாக சொல்கிறார்களா? என்பதாகும். நடுவர் ஒருவர் எழும்பி ஒரு பைத்தியத்திடம் ரெலிபோனைக் காட்டி இது என்ன என்றாராம்? அதற்கு பைத்தியம் தொலைக்காட்சி என்றதாம். உடனே நடுவர் தெரிஞ்சாக்கள் சொல்லுங்கள் என்றார். உடனே அங்கிருந்த பைத்தியமற்ற கடைக்காரர் எழும்பி ரெலிபோன் என்றார். உடனே நடுவர் பைத்தியங்களுக்கு நடத்தப்பட்ட போட்டியில் பைத்தியமற்ற கடைக்காரர் விடையைச் சொன்னதால் இனி இவரும் பைத்தியம் நிறைந்த பட்டியலில் சேர்க்கப்படுவார் என்றார்.

**ஆக்கம்**
அ.நிறோஜன்
**சிறகுகள் சிறுவர் கழகம்**

குட்டிக்கதை

# கடமை

கெற்பேலி எனும் அழகிய கிராமத்திலே வடிவேல் என்ற குடும்பத்தலைவர் இருந்தார். அவருடைய மனைவியின் பெயர் கமலம். அவர்களிற்கு இரு மகன்களும் ஒரு மகளும் இருந்தனர். அவர்களின் பெயர் ரஷாக், டிஷாந்தன், சாந்தி. இவ் மூன்று பிள்ளைகளையும் அவர் சௌகரியமாக வளர்த்து வந்தார். மூன்று பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பி தரம் ஐந்து மட்டும்தான் கல்வி கற்க அனுமதித்தார்.

ஆனாலும் பிள்ளைகள் மூன்று பேருக்கும் படிக்க ஆசைதான். சாந்தி அப்பாவிடம் அப்பா "நான் மேலும் படிக்கப் போகிறேன் என்று தயங்கிய படியே கேட்டாள். அதற்கு அவர் பெண் பிள்ளைகள் வெளியிலே போகக் கூடாது. தனிய ஒரு இடமும் செல்லக்கூடாது என்று கூறினார். அதற்கு இரண்டு மகன்களும் அப்பா தங்கச்சியை இப்படிச் சொல்லி மறித்து

விட்டீர்கள். ஏன் எங்களை மறித்தீர்கள்? அட நாயே! நான் தனியே உழைச்சாகணுமா? நீங்க இரண்டு பேரும் உழைச்சாத்தானே நாங்களும் நின்மதியாக இருப்போம். இனி இப்படி கேள்விக்கு மேல் கேள்வி கேட்டால் பல்லை உடைத்து விடுவேன். போங்கடா மண்வெட்டியை எடுத்துக் கொண்டு அம்மாவிடம் சாப்பாட்டை வேண்டிக்கொண்டு இரண்டு பேரும் வந்து விட வேண்டும். எடியே பிள்ளை நீ வெளியில போகாதே. அம்மாவிற்கு ஒத்தாசையாய் இரு என்று சொல்லிவிட்டு தோட்டத்திற்கு சென்றார்.

அவர் போன பிறகு ரஸாக், டிஷாந்தன் இரண்டு பேரும் கவலை தோய்ந்த முகத்துடன் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு தமது தோட்டத்திற்கு கால்நடையாக கொண்டு சென்றனர். செல்லும் வழியில் அவர்களை அவர்களுடைய அதிபர் கண்டார். ஏன் பாடசாலைக்கு வருவதில்லை என்று கேட்க இரண்டு பேரும் அழுது கொண்டே நடந்ததைக் கூறினார்கள். அதற்கு அவர் நீங்கள் லீவாக நிற்கிற நேரம் என்னட்டை வந்து படிக்கலாம் என்று கூறினார். பின்பு இருவரும் தோட்டத்தை அடைந்து உணவை தகப்பனிடம் கொடுத்து விட்டு தோட்டத்து மண்ணை இரண்டு பேரும் கொத்தினார்கள். கொத்தி முடிந்த பின் வீடு வந்து சேர்ந்தார்கள். பின்பு அவர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். அப்பொழுது அவர்ளுடைய அப்பா வந்து இன்றைக்கு மண்வெட்டி பிடித்திருக்கிறார்கள். வடிவாய் சாப்பாடு போடு என்று நக்கலாக கூறினார். அவர்கள் தொண்டையில் சிக்கிய முள் போல தகப்பனாரின் பிடியிலிருந்து விடுபட்டு ஒரு மாதிரி வந்து இளைப்பாறினார்கள்.

அப்போது அங்கு வந்த தங்கையாரைக் கண்டு எழும்பி இன்று காலையில் அதிபர் சொன்ன விசயத்தை சொன்னார்கள். அதற்கு அவள் அப்பா, அம்மாவிடம் பொய் சொல்லிப் படித்தால் ஒரு பிரயோசனமும் இல்லையண்ணா. அவர்கள் பத்து மாதம் சுமந்து பெற்றதற்கு நாம் உண்மை பேசி அன்பாக இருப்போம். இதுதான் நாங்கள் அப்பா, அம்மாவிற்கு செய்யும் கடமையாகும் என்றாள்.

ஆக்கம்
சிறுவர் கழக அங்கத்தவர்

# குடையின் சுயசரிதை

நான் வீட்டிலுள்ள பழைய பொருட்களை சுத்தம் செய்த போது குடையானது தன்னைப் பற்றிய கதையை கூறத் தொடங்கியது.

நான் இப்போது குடைந்து மங்கிய குடை பேசுகிறேன். நான் இப்போது ஒரு மூலையில் கிடக்கின்றேன். எனது பெயர் வெள்ளிக் குடை. நான் அழகிய இடமாகிய பொலநறுவையில் இருந்து சதீஸ் என்னும்யாழ்ப்பாணத்துக்கடைமுதலாளியால்கொண்டுவரப்பட்டேன். நான் பல பெரிய சிறிய கம்பிகளால் பொருத்தப்பட்டு அழகான கைபிடியுடன் காட்சியளித்தேன். என்னை ஒரு மாணவி வாங்கினார். எனது அழகையும் என்னுடைய பெருமையைப் பற்றியும் பலருடன் கதைப்பார். என்னை தான் செல்லுமிடமெல்லாம் கூட்டிச் செல்வார். என்னைகவனமாகபாதுகாத்துவந்தார்.

காலம் செய்த கோலம்தான். நூன் என் ஒளியிலிருந்து மங்கினேன். சில துவாரங்கள் என்னுள் காணப்பட்டன. என்னைப் பெருமையாகபேசியமாணவிஇப்போதுஒருமூலையில்துக்கிப்போட்டு விட்டார். நான் இப்போது ஒருவருக்கும் பயன் படாமல் இருக்கின்றேன். எனது உறவினரையும் கண்டதில்லை என்று குடை தனது கதையைக் கூறிமுடித்தது.

ஆக்கம்யூ.பிரதாபன்
அரும்புகள்சிறுவர்கழகம

# அன்னை மடியில் மீண்டும்...

என் இதயங்களை திறந்து எழுதுகிறேன்
எத்தனை தடவைகள் அழுதிருப்பேன்
அம்மா, அம்மா என்று.........
அழுத கண்ணீரிலும் ஆயிரம் வரி என்ன செய்யலாம் - இந்த
இற்றுப் போன வாழ்க்கையை.........!
பத்துத் திங்களது படாத பாடுபட்டு இந்த பாரிற்கெம்மை
அழைத்து வந்தவளும் அம்மா
தன் இரக்கத்தை பாலாக்கி கொடுத்தவளும் அம்மா
எத்தகைய விலையுயர்ந்த
பஞ்சு மெத்தையில் படுத்தாலும்
தூக்கமது
தூரத்தில்த்தான் உள்ளது
அன்னையவள் மடியதை தலையணையாக்கி பாசத்தோடு
தலையதைக் கோதி விட்டாள் அரை நிமிடமது
போதுமே...........
பாசமான அன்னையது மடி மீண்டும்
வேண்டுமெனக்கு!

**ஆக்கம்** R.X.G.சாள்ஸ்
**தென்றல் சிறுவர் கழகம்**

# வேண்டாம்

பணிவில்லாப் பண்பு வேண்டாம்
பொய்யான உள்ளம் வேண்டாம்
மன்னிக்கா மனம் வேண்டாம்
பகைமையான பாசம் வேண்டாம்
நன்றியில்லா நட்பு வேண்டாம்
உதவா உள்ளம் வேண்டாம்
வறுமையான வாழ்வு வேண்டாம்
அடக்கமில்லா அமைதி வேண்டாம்
சமாதானமில்லா சமூகம் வேண்டாம்

**ஆக்கம்**:அ.லூட்பிரிசின்னா
தென்றல் சிறுவர் கழகம்

# பொங்கி எழும் சிறுவர்கள்

கிளியே கிளியே நீ பறந்து வா
எம்மைக் காக்க ஓடி வா
நமது உடம்பை துன்புறுத்தும்
மானிடர்களை கொளுத்த வா (கிளியே கிளியே)

நீ கூண்டுக்குள் அடைபட்டால்
நாம் வீட்டுக்குள் அடைபடுவோம்
நாம் துன்புறும் நிலையைக் கண்டு
நீ தப்பி ஓடி வாம்மா (கிளியே கிளியே)

ஏனம்மா இந்த சோதனை
வேண்டாம் இந்த போதனை
கிளித்தாயே இனி வேண்டாம் அம்மா தாமதம்
நாம் பொறுத்தது போதுமம்மா (கிளியே கிளியே)

பொங்கி எழுவோம் - எம்
உரிமையை பெறுவோம்
நிமிர்ந்து நிற்போம் - நாம்
சாதனை படைப்போம் (கிளியே கிளியே)

**ஆக்கம்**: ஹம்சா
சிறகுகள் சிறுவர் கழகம்

# கல்வி

கல்வி என்பது மூன்றெழுத்து
கற்று விட்டால் கோடியெழுத்து
கல்வியைக் கற்கும் போது கசப்பு
கற்று விட்டால் தேன் போன்று இனிப்பு
கல்வியைக் கள்வனாலும் கவர முடியாது

கடும் காற்றாலும் அழிக்க முடியாது
செல்வத்தில் சிறந்தது கல்வி
சென்ற இடமெல்லாம் சிறப்பு விளங்கும்
கல்வி கொடுக்கக் கொடுக்கப் பெருகும்
கல்வி வாழ்வில் கண்ணாக விளங்கும்

ஆக்கம்
யே.அலைக்ஷன்
தென்றல் சிறுவர் கழகம்

# சிறுவர்கள் உலகம்
## கருத்துக்கள்

இந்த உலகத்தில் எமது சிறுவர்கள் சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழவேண்டும். உலகத்தில் சிறுவர்களுக்கு முன்னுரிமைகளை கொடுத்தல் வேண்டும். சிறுவர்கள் இந்த உலகத்திலேயே தமது நட்புரிமைகளை புதுப்பிக்கின்றனர். சிறுவர்களை துன்புறுத்தாதீர்கள். அவர்கள் மகிழ்வுற அவர்கள் உரிமைகளை அவர்களுக்கு கொடுங்கள். எமது சிறுவர்கள்தான் இன்றைய உலகம். உலகின் எல்லைகள் எல்லாமே சிறுவர்கள் தோனி. சிறுவர்களே அச்சமின்றி உலகில் முன்னுரிமை கொள். ஒவ்வொரு விடியலையும் நோக்கி சென்றிடு. நம்பிக்கை என்பது வேண்டும் சிறுவர்கள் வாழ்வில்.

ஆக்கம்
ஜெ.யூலியா
தென்றல் சிறுவர் கழகம்

# தாயவள்

உலகிற்கு என்னைத் தந்து
உதிர மனதைப் பாலாக்கித் தந்த
தாயவள் தாய்மையை நேசிக்கிறேன்
அறிவுரைகள் கூறி என்னை
அரவணைத்துக் காத்திடும்
அவள் பெண்மையை நேசிக்கிறேன்
பொங்கும் கடலையும்
பொன்னாய் மாற்றிடும்
மாதரே உன்னை நேசிக்கிறேன்
பாரில் என்னை
பண்பாளன் ஆக்கிய
தாயே உன்னை நேசிக்கிறேன்

**ஆக்கம்**
சி.ஜெயசுதன்
சிறகுகள் சிறுவர் கழகம்

# எங்கள் அம்மா அப்பாவை......

மடியில் வைத்துப் பாலூட்டி
தொட்டிலில் இட்டுத் தாலாட்டி
அன்னம் ஊட்டி வளர்த்திடும்
அன்புத் தெய்வம் அம்மாவே!

கல்வி கேள்வியிற் சிறந்திட
நல்ல முறையில் கற்பித்து
அறிவை வளர்க்க உதவிடும்
எங்கள் இறைவன் அப்பாவே!
நாங்கள் நலமாய் வாழ்ந்திட
தாங்கள் துன்பப்படுகின்ற

எங்கள் அம்மா அப்பாவை
என்றும் மதித்து நடப்போமே!
குடும்பம் என்னும் கூட்டிக்
கட்டிக் காக்கும் பெற்றோரை
மாணவர் நாங்கள் எல்லோரும்
மதித்து வாழ்வோம் எந்நாளுமே!

நாங்கள் நோயினால் வாடினால்
தாங்கள் தாதியாய் மாறிடும்
எங்கள் பெற்றோர் அன்பினை
என்றும் மனதில் நிறுத்துவோம்!

அம்மா, அப்பா இருவரும்
அன்பை அறிவைத் தருகின்றார்
உறுதி கொள்வோம் இவர்களை
இறுதி வரையில் காத்திட.......

**ஆக்கம்**
**சிறுவர் கழக அங்கத்தவர்**

# பள்ளி வாழ்க்கையிலே

காலையில் பள்ளிக்கு வருவோமே
கடவுளை வணங்கிப் படிப்போமே!
மாலையில் ஆடி மகிழ்வோமே
மனதைப் பழக்கிக் கொள்வோமே!
குரங்குகள் பாயும் குயில்கள் பாயும்
கோல மயிலும் களித்திடும்
மரமும் மலரும் நம் தோழர்
மாடும் ஆடும் கூட்டாளி
பாம்பும் பக்கம் வந்தாடும்
சோம்பல் இல்லை சொர்க்கம்தான்
சேரும் பள்ளி வாழ்க்கையிலே!

**ஆக்கம்**
அ.அன்ரன் நிறோஜன்
அரும்புகள் சிறுவர் கழகம்

# இராட்சத அலை

ஆயிரம் ஆயிரம் உயிர்களை
வாவென்று மென்று விட்டாயே
1 இழந்து போன உறவுகளை எண்ணி
உருகிப் போகிறோம் எஞ்சிய உறவுகள்
வங்கக் கடலை வருணித்துப் பாடிய
கவிஞர்கள் இன்று உன்னை
இகழ்ந்து பாடுகின்றனரே!
2

ஆக்கம்
யூ.நிருபாதரன்
அரும்புகள் சிறுவர் கழகம்

3

# என் அன்பு அன்னைக்கு!!!

இரத்தத்தைப் பாலாக்கித் தந்த அன்னையே
கண் விழித்துக் காத்த அன்னையே
துன்பம் அணுகாமல் எம்மை அரவணைத்த அன்னையே
கண்ணை இமை காப்பது போல எம்மைக் காத்த அன்னையே
எம்மை தாலாட்டுப் பாடி உறங்க வைக்கும் அன்னையே
எம் குரல் கேட்கும் முன் எம் பசி தீர்க்கும் அன்னையே
எம்மை விட்டு நீங்காது இருக்கும் அன்னையே
படிப்பிலும் விளையாட்டிலும் ஊக்கமூட்டும் அன்னையே
எழில் கொஞ்சும் அன்னையே
என் உயிர் உள்ள வரை — உன்
நினைவுகள் என் மனதில் பொறிக்கப்பட்டிருக்கும்

ஆக்கம்
செ.ஜீன்கிறைஸ்ரினா
தென்றல் சிறுவர் கழகம்

# அம்பிகை நகர் இளந்தளிர் சிறுவர் கழகம்

இந்து மா கடலின் முத்தென இலங்கும் யாழ் நகர் தன்னில் தென் பாலிலங்கும் சிறு கடல் சூழ்ந்த அழகொளிர் கிராமமான பனை தரு தென்னையும் நிறைந்த கடற்கரை அருகாமையிலே வேலணை மேற்கில் அமைந்தது அம்பிகை நகர் என்னும் ஒரு அழகிய சிறு கிராமம். இக்கிராத்திலே 200 குடும்பங்கள் சிறு குடிசை வீடுகளிலும் கல் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இக் கிராம மக்கள் கடல்த் தொழில் செய்தே தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இங்கு வாழும் மக்கள் அனைவரும் இந்து சமயத்தவர்களே. இக் கிராமம் சிறிய ஒரு கிராமமாக இருந்தாலும் அங்கு ஸ்ரீ மகேஸ்வரி அம்மன் ஆலயம், சன சமூக நிலையம், பாலர் பாடசாலை, விளையாட்டுக் கழகம் என்பன உண்டு. ஆனால் தரம் 1-A/L வரையிலான கல்வியினைக் கற்பதற்காக அயல்க் கிராமத்திலுள்ள வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்திலும், சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய கல்லூரியிலும், தமது கல்வியினை கற்று வருகின்றனர்.

இச் சிறுவர்கள் பாடசாலை முடிந்ததும் மற்றைய நேரங்களில் தமது கல்வியைத் தொடரக் கூடிய எந்த வசதியுமின்றி வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தமது பொழுது போக்காக படம் பார்த்தல், பெற்றோர்களுடன் தொழிலுக்கு செல்லுதல், பயனற்ற செயற்பாடுகளில் ஈடுபடல் போன்றவற்றில் தமது பொழுதினை களித்து வருகின்றனர். இச் செயற்பாடுகளில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வம் காரணமாக பாடசாலைக் கல்வியினை இடை நிறுத்தி தமது எதிர் காலத்தையே வீணாக்கி வருகின்றனர்.

சிறுவர் கழக ஊக்குவிப்பாளர் இ.ராகினி அவர்களிடம் இச்சிறுவர் கழகத்தின் உருவாக்கம் மற்றும் பங்களிப்புப் பற்றி கேட்ட போது

"நாங்கள் இக் கிராமத்தைப் பற்றி அறிந்து இக் கிராமத்தில் சிறுவர் கழகம் அமைப்பதற்காக சென்று அங்குள்ள மக்களிடமும், பெரியவர்களிடமும், இளைஞர்களிடமும் எம் திட்டம் பற்றிய விளக்கத்தை மிகவும் தெளிவாக கூறினோம். அங்குள்ள மக்கள் அனைவரும் அதனை வரவேற்றனர். எங்களுடைய ஊரிலுள்ள சிறுவர்களுக்கும், வளர்ந்து வரும் சிறுவர்களுக்கும் இச் செயற்பாடு மிகவும் அவசியம் என்று கூறி

ஆவலுடன் வரவேற்றனர்.
நாம் திட்டத்தை செயல்படுத்த ஆரம்பிக்கும் போது பெற்றோர்கள் சிறுவர்களை அனுப்பி வைத்தனர். இக் கிராமத்தில் சிறுவர் கழகமானது 2004-10-01 அன்று உருவாக்கப்பட்டது. அங்குள்ள பெற்றோர்கள், இளைஞர்களின் ஓய்வு நேரங்களை பயன்படுத்தி அவர்களையும் இத் திட்டத்தினுள் இணைத்து விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மூலம் சிறுவர்கள் அடையும் நன்மைகள், வளர்ச்சிப் போக்குகள் என்பன பற்றி தெளிவாக எடுத்துரைத்து பெற்றோர், பெரியோர், இளைஞர், யுவதிகளின் முழுமையான பங்களிப்பும் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டோம்.ஆரம்பத்தில் 35 சிறுவர்கள் இக் கழகத்திற்கு வருகை தந்தார்கள்.”

இச் சிறுவர் கழகத்தினால் ஏற்படும் நன்மைகள் பற்றி கழகத் தலைவர் குகதாஸிடம் கேட்ட போது
“இச் சிறுவர் கழகத்தில் கலந்து கொண்டது மிகவும் சந்தோஷம். ஏனெனில் பாடசாலைகளில் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுவது மிகவும் குறைவு. ஓய்வு நேரங்களில் சினிமாப் படம் பார்ப்பதும் வீட்டில் வேலை செய்வதும் கடற்றொழிலுக்கு செல்வதுமாக இருந்த எங்களுடைய ஓய்வு நேரங்களை இச் சிறுவர் கழகத்தில் ஈடுபடுத்தி எமது ஆற்றல் திறன்களான ஆக்கங்கள் (கவிதை, கட்டுடரை, பேச்சு, பொது அறிவு, விடுகதை, சிந்தனைத் துளிகள், நகைச் சுவைத் துளிகள்), தலைமைத்துவப் பண்புகள், கலையாற்றல்கள் (நடனம், பாட்டு, படம் வரைதல், நாடகம்) போன்றவற்றை வெளிப்படுத்தக் கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. வேறு இடங்களில் இச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இவ்வளவு காலமும் எமது ஆற்றல் திறன் எமக்கே தெரியாமலிருந்தது. தற்பொழுது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறோம்” என்று கூறி முடித்தார்.

பெற்றோர்கள் உங்களுக்கு ஆதரவு தருகிறார்களா? என்றுகேட்டதற்கு செயலாளர் செந்தூர்ச்செல்வன் இவ்வாறு பதிலளித்தார்.
“எமது அம்மா அப்பா மட்டுமல்ல, இக் கிராமத்திலுள்ள பெரியவரகள் இளைஞர்கள், சனசமூகத் தலைவர் ஆகியோரும் எங்களுக்கு ஆதரவு தருகிறார்கள். எமது சிறுவர் கழகத்திற்கு அலுவலகம் அமைப்பதற்காக அவர்கள்

சனசமூக நிலையத்தின் ஒரு பகுதியைத் தந்து உதவியுள்ளார்கள்." என்றார்.

தொகுப்பு
இ. ராகினி,
சிறுவர் ஊக்குவிப்பளர்

# பொன்மொழிகள்

- ❖ உண்மைக்காக எதையும் திறக்கலாம். ஆனால் எதன் பொருட்டும் உண்மையைத் திறக்கக் கூடாது.
- ❖ பொய்மையின் வழி துணை வழி. சத்தியத்தின் வழி தனி வழி.
- ❖ வட்டிக்கு பணம் கொடுப்பதை விட அதனை கல்விக்கு செலவழித்தால் நிச்சயம் அதிக பயன்தரும்.
- ❖ சேமிப்பு இல்லாத குடும்பம். கூரை இல்லாத வீட்டுக்குச் சமம்.
- ❖ அன்பே பிரதானம் அதுவே வெகுமானம்.
- ❖ காலம் பொன்னானது. கடமை கண்ணானது.
- ❖ கீழ்படியக் கற்றுக் கொண்டால் கட்டளையிடும் பதவி தானாகவே வரும்.
- ❖ அதிஷ்ரத்திற்கு காத்திருப்பதும் சாவிற்கு காத்திருப்பதும் ஒன்றே.
- ❖ எத்தனை குற்றத்தையும் மன்னிக்கும் இடம் தாயுள்ளம்.
- ❖ தோல்வியைக் கண்டு துவண்டு விடாதே. வெற்றியைக் கண்டு வெறி கொண்டு விடாதே.
- ❖ அரசனது சிம்மாசனத்தையும் கவிழ்க்கக் கூடியது ஏழையின் கண்ணீர்.
- ❖ உனது திறமையை சொல்லிக் காட்டாதே. செயலில்க் காட்டு.
- ❖ நூறு ஆசான்களுக்கு சமம் ஒரு பொறுப்பு மிக்க தந்தை.
- ❖ முயற்சி, பொறுமை இரண்டும் வண்டியின் இரு சக்கரங்கள்.
- ❖ பணம் உன்னை வைத்திருக்கக் கூடாது. நீதான் பணத்தை வைத்திருக்க வேண்டும்.
- ❖ ஏர் முனையை விட எழுதுகோல் முனை பெறுமதி வாய்ந்தது.
- ❖ தோல்விதான் வெற்றியின் முதற்படி.
- ❖ விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் வெற்றியைப் பெற்றுத் தரும் சாதனங்கள்.

❖ தவப் பொழுதை அவப் பொழுதாக்காதே.
❖ வேகம் முக்கியமல்ல. விவேகம்தான் முக்கியம்.

ஆக்கம்
வ.காயத்திரி
அரும்புகள் சிறுவர் கழகம்

# பொது அறிவு

1. காளான்களிலிருந்து எடுக்கப்படும் மருந்துப் பொருள்
   பென்சிலின்
2. உப்புத் தண்ணீரில் வளரும் கொடி
   மாங்குரோவ்
3. காற்றின் ஈரப்பதத்தை அறிய உதவும் கருவி
   கைக்கோ மீட்டர்
4. மழையை அளக்கும் கருவி
   ஃப்ளுவியோ மீட்டர்
5. உலகம் முழுவதும் வாழும் ஒரே உயிரினம்
   நாய்
6. நடந்தே உலகைச் சுற்றி வந்த எழுத்தாளர்
   ஸ்டீவன் நியூமன்
7. தாவர இயலின் தந்தை எனப்படுபவர்
   தியோபாரஸ்டா
8. இண்டிகா என்ற வரலாற்று நூலை எழுதியவர்
   மெகால் தனிஸ்
9. தேனீக்கு எத்தனை இரப்பை
   இரண்டு
10. உலகிலேயே மிகப் பெரிய கடற்படையை கொண்ட நாடு
    ரஷ்யா

ஆக்கம்
யூ.யுஸ்லின்
அரும்புகள் சிறுவர் கழகம்

# ஆங்கிலக் கல்வியின் அவசியம்

உலகில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மொழிகள் விளங்கி வருகின்றன. ஒருவர் தமது கருத்தை பிறருக்கு புலப்படுத்தவும் பிறர் கருத்தை விளங்கிக் கொள்ளவும் மொழி ஓர் ஊடகமாக அமைந்துள்ளது. அது மக்களின் அறிவை வளர்த்து வாழ்வை உயர்த்தும் சிறந்த ஏணியாகத் திகழ்கின்றது. மேலும் பலர் சேர்ந்து சமூகமாய், இனமாய்ப் பழகி வாழ துணையும் புரிகின்றது. சமூக வட்டம் விரிவடைய விரிவடைய மொழியும் ஆழம், அகலம் முதலியவற்றால் வளர்ச்சி அடைந்து செல்கின்றது. ஆங்கிலம் இன்று உலகப் பொது மொழியாகும். இன்று ஆங்கிலம் இருபத்தேழு கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்படுகிறது. கல்வி புதிய அறிவைப் பெறுவதற்கும் பெற்ற அறிவை வளர்பதற்கும் வழிவகுக்கின்றது. கல்வியறிவினை பெரும்பாலும் படசாலைகள் வாயிலாக பெறவேண்டியிருக்கிறது. இங்கு குறிப்பிடப்படுவது உயர்நிலைக் கல்லூரிகளையும், பல்கலைக்கழகத்தையும் சுட்டும். பாடசாலைப் படிப்பின் மூலம் பெரியோர் கூறும் அறிவுரைகள் வாயிலாக செய்தித்தாள், கதைப் புத்தகம், வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றின் வாயிலாக ஆங்கிலக் கல்வியை பெற முடியும். எனவே ஆங்கில கல்வி சகல துறைகளிலும் முன்னேற அவசியமாகும்.

**ஆக்கம்**

க.சதீஸ்க்குமார்

**சிறகுகள் சிறுவர் கழகம்**

# நோக்கம்

வாழ வந்த பூமியிலே
வாழ்விழந்து பரிதவிக்கும்
இளம் நெஞ்சங்கள் படும்
போராட்டங்கள் தான் எத்தனை?
இத்தனைக்கும் காரணம் உறவுகளைத்
திருடிச் சென்ற சுனாமி - இதன்
நோக்கம் தான் என்னவோ?

**ஆக்கம்**

யூ.யுஸ்லின்

அரும்புகள் சிறுவர் கழகம்

# பிரிந்த உறவுகள்

பேரலையின் பேயாட்டத்தில்
சிதறிப் போனது என் உறவு!
நானும் ஓடினேன் அவர்களும் ஓடினார்கள்
வாழ்க்கையின் விளிம்புக்கே ஓடினோம் - ஆனால்
சாவு எம்மை சப்பித் துப்பியது
இங்கு உறவுகளின் ஒப்பாரி
உலகத்தையே உலுக்குகிறது
மீன் பிடிக்கப் போன மகன்
மீனுக்கு உணவாகினானே!
பார்த்த மாப்பிள்ளைக்கு
மோதிரம் சங்கிலி செய்து வைத்தேன்
பாவி மகள் பறந்து போனாளே!
அம்மா என்ற அமுதக் குரல் உ என்
காதில் விழ முன்னே
அன்பான பாலகனை
அலை கொண்டு போனதிங்கே!
கண்ட கண்கள் தூக்கத்தை தடுக்கின்றன
அப்பா காப்பாற்றுங்கள்
கடலில் அலை காய்ந்து விட்டாலும்
கண்களில் வெண்மை காயவில்லை!
ஏ....... பேரலையே!
நீ உருட்டிச் சென்ற என் உறவுகளை
எப்போது திருப்பித் தருவாய்?

ஆக்கம்
பா.சசிகலா
அரும்புகள் சிறுவர் கழகம்

# நான்கு சகோதரர்கள்

ஏழைக் குடியவனுக்கு நான்கு சகோதரர்கள் இருந்தனர். அவருக்கு போதுமான வருமானம் இல்லாததால் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. அதனால் அவர்களை ஏதேனும் தொழில் செய்து சம்பாதித்து வர அருகிலுள்ள ஊர்களுக்கு அனுப்பினார். அவர்கள் நால்வரும் வெளியூர் புறப்பட்டுச் சென்றனர். பல ஊர்களிலும் சுற்றி அலைந்து கடைசியில் ஒரு கிராமத்தை அடைந்தனர். அங்கே வயது முதிர்ந்த ஒருவரை சந்தித்தனர். அவரிடம் வேலை கேட்டனர் ஆனால் அப்பெரியவர் அவர்களிடம் என்னிடம் வேலை எதுவும் இல்லை. ஆனால் எனக்கு தெரிந்துள்ள பல கலைகளை உங்களுக்கு கற்றுத் தருகின்றேன். அதைக் கொண்டு நீங்கள் பிழைத்துக் கொள்ளுங்கள் என்றார். நால்வரும் சம்மதித்தனர்.

அன்று முதல் அப்பெரியவருடன் இருந்து பல கலைகளைக் கற்றனர். சில நாட்கள் கழித்து அப்பெரியவர் அவர்களிடம் இனி நீங்கள் வேறிடம் சென்று உமது சாமர்த்தியத்தால் பிழைத்துக் கொள்ளுங்கள் என்றார். அவர்களும் புறப்பட்டுச் சென்றனர். அவர்களில் மூத்த மூவரும் சிறிது கர்வத்துடன் இருந்தனர். தங்களுக்கு பல கலைகள் தெரிந்ததை நினைத்து இறுமாப்புடன் இருந்தனர். ஆனால் கடைசி சகோதரன் சிறிது புத்திக் கூர்மையுள்ளவன். அவன் சிறிது அடக்கத்துடன் இருந்தான். வழியில் அவர்கள் ஒரு காட்டைக் கடக்க வேண்டி நேர்ந்தது. ஓரிடத்தில் சிங்கத்தின் எலும்புகள் சிதறிக் கிடப்பதைக் கண்டனர். உடனே மூத்த மூவரும் தமது கலைகளில் திறனை சோதிக்க தீர்மானித்தனர். ஆனால் நான்காவது பையன் அவர்களை எச்சரித்தான். சிங்கத்திற்கு உயிர் கொடுத்தால் முதலில் நம்மையே அடித்துக் கொல்லும் என்று கூறினான். அம் மூவரும் அதனைச் செவிமடுக்காது தங்களது வேலையில் இறங்கினர். நான்காவது பையன் வேகமாக ஓடி அருகிலிருந்த மரத்தின் மேல் ஏறிக்கொண்டான். மூத்தவன் அவ்வெலும்புகளை ஒழுங்காக அடுக்கினான். இரண்டாமவன் அதற்குச் சதையும் உடம்பும் உண்டாகச் செய்தான். மூன்றாமவன் அதற்கு உயிர் கொடுத்தான். அவர்கள் இக்கலைகளில் நன்கு தேர்ச்சி அடைந்திருந்தனர். அதனால் அச்சிங்கம் உடனே உயிர் பெற்று எழுந்தது. எதிரில் இருந்த மூவரையும் அடித்துக் கொன்றது. பிறகு அங்கிருந்து சென்றது. இதைக் கண்ட நான் காமவன் வருத்தமுற்று மரத்திலிருந்து கீழே இறங்கினான். தான் ஊர் சென்று நடந்தவற்றை தகப்பனிடம் கூறினான்.

**ஆக்கம்**

யூ.பிரபாதரன்
அரும்புகள் சிறுவர் கழகம்

## விடுகதைகள்

1. மழைக்காலம் வந்து விட்டால் மகராசி பாட்டெடுப்பாள் அவர் யார்?
தவளை
2. தீக் குளித்தாலும் திடமாக இருப்பவர் அவர் யார்?
செங்கல்
3. கல்வீட்டுத் தாத்தா மெதுவாக நடந்து வந்தார் அவர் யார்?
ஆமை
4. வயலின் உழவன் ஊதியம் வாங்கவில்லை அவர் யார்?
மண்புழு
5. புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவாரே ஓராண்டு அவன் யார்?
கலண்டர்
6. வெய்யிலில் மலரும் காற்றில் உலரும் அது என்ன?
சூரியன்
7. தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்?
பென்சில்
8. ஊசி போட்ட வைத்தியர் பாடிக் கொண்டு பேசுகிறார் அவர் யார்?
நுளம்பு

**ஆக்கம்**
வீ.அன்பழகன்

## பொது அறிவு

1. துவிச்சக்கரவண்டியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் யார்?
2. தலை குனிந்து தண்ணீர் அருந்தும் பறவை எது?
3. சிறிய இருதயம் உள்ள மிருகம் எது?
4. இலங்கையில் கடைசியாக நிறுவப்பட்ட நீர் மின்கூடம் எது?
5. ஆலைக் கழிவுகள் சேர்வதால் அதிகம் மாசுறும் நதி எது?
6. கடிகாரத்தை கண்டு பிடித்த நாடு எது?

7. கணணியைக் கண்டு பிடித்த நாடு எது?

8. கைத் தொலைபேசியை கண்டு பிடித்த நாடு எது?

9. நபிகள் நாயகத்தின் துணைவி பெயர் என்ன?

10. இலங்கையின் மிகப் பெரிய சரணாலயம் எது?

**விடைகள்**

1. மைக் மில்டர்
2. புறா
3. சிங்கம்
4. குக்குலே கங்க
5. களனி கங்கை
6. சுவிஸ்லாந்து
7. அமெரிக்கா
8. பின்லாந்து
9. கஜீதா - நாயகி
10. குமண காடு

**ஆக்கம்**
**இ.யூட் நிசாந்தினி**
**அரும்புகள் சிறுவர் கழகம்**

## கவி நயம்

❖ கல்வி

எதற்காக அழுகின்றாய் - சகோதரனே!
மறந்திடு உன் கண்ணீரை - உன்
உறவாய் கல்வியை நேசி - ஏன்
கல்விதான் நாளை உனக்கு உயிர் கொடுக்கும்.

❖ அன்பு

அன்புக்கு ஆயிரம் வழிகள் உண்டு அன்பு எனும்
உழியால் அழகற்றகற்பாறைகளைக் கூட
சிற்பங்களாக மாற்றலாம் - எனவே நீ உன்

அயலானை அன்பு செய் - ஏனென்றால்
"அன்புதான் வீரத்தின் விளை நிலம்".

❖ புகழ் — புகழ் என்பது ஓர் ஏணி அந்த ஏணியை யாரும் தாண்டுவதில்லை –
எனவே உனக்கு சேரும் புகழை எண்ணி பெருமைப்படாதே!

**ஆக்கம்**
ஜெகிலா
அரும்புகள் சிறுவர் கழகம்

# சிறுவர்களின் உல்லாசம்

துள்ளித் திரியும் சிறுவர்களே
துடிப்புடன் சேர்ந்துமே
இலை மறை காய் ஆற்றல்களை
வெளிக் கொணர உதவும் கழகம்

பள்ளிச் சிறுவர் நாமுமே
பங்குடன் சேர்ந்து மகிழுவோம்
சிட்டுக் குருவி போல் கூடி ஆடி
மகிழ்ந்திடுவோம்

வண்ண வண்ண இதழ்களால்
வாசம் வீசும் மலர்களால்
துள்ளித் துள்ளித் இதழ் விரிந்து
மணம் எங்கும் வீசிடுவோம்

சின்னச் சின்ன சிறுவர்களாம்
சிப்பி போன்ற முத்துக்களாம்
கடவுள் தந்த உயிர் மூச்சை
கடைசி வரை காப்பாற்றுவோம்

**ஆக்கம்**
றோ.அனோஜன்
அரும்புகள் சிறுவர் கழகம

# வீண் பெருமை

அந்தி மாலைப் பொழுதினிலே மேகம் திரண்டு வானம் முழுவதும் கருமுகில்க் கூட்டம் காணப்பட்டது. மழை வரும் போல் தென்பட்டது. மயில் ஒன்றிற்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டானது. வனத்தை வானத்தை அண்ணாந்து பார்த்து தன்னையும் ஒரு கணம் பார்த்தது. ஆகா எவ்வளவு அழகாக இருக்கிறேன் என்று பெருமை உண்டானது.

தன்னைப் போல் அழகானவர்கள் எவரும் இல்லை என்று எண்ணியது. அந்த மயில் தன்னுடைய அயலவளான குயிலிடம் சென்றது. தனது அழகிய தோகையை விரித்து ஆடி பார்த்தாயா எவ்வளவு அழகாக இருக்கிறேன். நான் அழகாக ஆடுவதைப் பார்த்து அரசர்களும் மகிழ்வர். சிலவேளை பொறாமைப் படுபவர்களும் உண்டு. ஆனால் உன்னைப் பார்த்தால் ஆண்டிகள் கூட விரும்பமாட்டார்கள் என்று சொல்லி குயிலை ஏளனம் செய்தது அந்த மயில்.

மயிலின் செருக்குத் தனத்தை பார்த்த குயிலுக்கு சிரிப்பும் கோபமுமாக வந்தது. மயிலாரே உன் செருக்குப் பேச்சை நிறுத்து. அழகில் புரண்டு பெருமை கொள்வது சிறப்பா? அல்லது வானுயரப் பறந்து சிறுவர் முதல் பெரியோர் வரை மகிழ காற்றலையில் கீதம் பாடுவது சிறப்பா? இதோ பார் என்று குயில் தனது அழகிய குரலால் கீதம் இசைத்தது. மயிலோ வெட்கித் தலை குனிந்தது.

எனவே சிறுவர்களாகிய நாம் எதையும் எண்ணி பெருமை கொள்ளாது எம் திறமைகளை பாலைவனப் பூவைப் போல் மலரச் செய்வோம்.

**ஆக்கம்**
அதிஸ்ரன்
**அரும்புகள் சிறுவர் கழகம்**

# கொண்டாட்டம்

பணம் இருக்கும் வரை மனிதனுக்கு கொண்டாட்டம்
தண்ணீர் இருக்கும் வரை மீனுக்கு கொண்டாட்டம்
கடல் இருக்கும் வரை அலைக்கு கொண்டாட்டம்
தேன் இருக்கும் வரை வண்டுக்கு கொண்டாட்டம்
வண்டு இருக்கும் வரை மலருக்கு கொண்டாட்டம்
மரம் இருக்கும் வரைஇலைக்கு கொண்டாட்டம்
வானம் இருக்கும் வரை சேய்க்கு கொண்டாட்டம்
மனைவி இருக்கும் வரை கணவனுக்கு கொண்டாட்டம்
உயிர் இருக்கும் வரை உடலுக்கு கொண்டாட்டம்

**ஆக்கம்**

மி.றொசானி

## *பொது அறிவு*

1. உலகின் கூரை எனப்படும் நாடு எது?
2. உலகின் மிக உயரமான புல்லினம் எது?
3. பாம்பில்லாத நாடு எது?
4. இருண்ட கண்டம் எது?
5. மிகப் பெரிய தீவு எது?
6. மிகப் பெரிய பறவை எது?
7. மிகப் பெரிய கண்டம் எது?
8. மிகப் பெரிய கடல் எது?
9. மிகப் பெரிய நதி எது?
10. தொலைக் காட்சியைக் கண்டுபிடித்தவர் யார்?
11. ஆறு இல்லாத நாடு எது?
12. அதிக நீர் அருந்தும் பறவை எது?
13. ஞாபக சக்தி உடைய மிருகம் எது?
14. பித்தப் பை இல்லாத முலையூட்டி எது?
15. பௌத்த மதம் எங்கே தோன்றியது?

**விடைகள்**

1. திபெத்
2. மூங்கில்
3. அயர்லாந்து
4. ஆபிரிக்கா
5. கிறீன்லாந்து
6. தீக்கோழி
7. ஆசியா
8. தென்சீனக் கடல்
9. நைல்நதி
10. கலிலியோ கலிலி
11. சவுதி அரேபியா
12. புறா
13. யானை
14. எலி
15. இந்தியாவில

**ஆக்கம்**

றொ.றொமன்சியா

# சிந்தனைத் துளிகள் சில

❖ ஒருவரிடம் காட்டும் அன்பு — அவர்கள் குறையை மறைக்கும் போர்வையாக இருக்கக் கூடாது.

❖ நல்லவற்றைக் கூட்டிக் கொள்
தீயவற்றைக் கழித்துக் கொள்.
அன்பைப் பெருக்கிக் கொள்
வாழ்க்கையை வகுத்துக் கொள்.

❖ சிறு மலையைக் கடந்தே சிகரத்தை அடைய முடியும் —எனவே எதிர்வரும் பிரச்சினைகளை எதிர்க் கொண்டு சிகரமான வாழ்வை அடைந்துவிடு

❖ எதையும் நாளை செய்திடலாம்
என்று தள்ளி விடாதே - மாறாக
எதையும் இன்றே செய்வேன் - என்ற
நம்பிக்கையுடன் செயல்ப்படுவாயானால்
முன்னேறும் வழி இதுதான்.

**ஆக்கம்**

யூ.யுஸ்லின்

அரும்புகள் சிறுவர் கழகம்

## சுனாமி பற்றிய சில கருத்துக்கள்

❖ 1946ல் அலாங்காவில் ஏற்பட்ட நில நடுக்கம் உருவாக்கிய சுனாமி 3200 km கடந்து பாயைத் தாக்கியது. 1877ல் பெருவில் ஏற்பட்ட நில நடுக்கம் உருவாக்கிய சுனாமி 19 600km பயணித்து பாயைத் தாக்கியது. 1960ல் சுமாந்திராவில் ஏற்பட்ட நில அதிர்வு உருவாக்கிய சுனாமி 7 600km பயணித்து ஜப்பானை தாக்கியது. 2004ல் ஆண்டு சுமாந்திராவில் ஏற்பட்ட நில நடுக்கம் ஏற்படுத்திய சுனாமி 7 700km பயணித்து ஆசிய நாடுகள் பலவற்றை தாக்கியது.

## பாதிக்கப்பட்ட நாடுகள்

1. இலங்கை
2. இந்தியா
3. பங்களாதேஷ்
4. மலேசியா
5. இந்தோனேஷியா
6. தாய்லாந்து
7. மாலை தீவு
8. அந்தமான் தீவு

## உதவிய அமைப்புக்கள்

❖ ஐரோப்பிய பொருளாதார சமூகம்
❖ ஆசிய அபிவிருத்தி வங்கி
❖ உலக சுகாதார ஸ்தாபனம்
❖ உலக வங்கி
❖ பவண அமைப்பு

## பாதிக்கப்பட்ட உல்லாசப் பயணத் துறைகள்

❖ நிலாவெளி
❖ பாசிக்குடா
❖ கிக்கடுவ

ஆக்கம்
ஜெகிலா
அரும்புகள் சிறுவர் கழகம்

# ஏற்புடன் வாழ்வோம்

1. சிறுவர்கள் நாங்கள் சிறப்புடன் வாழ்ந்தால்
மறுமையும் மாண்பும் மீண்டிடும் வாழ்வில்
2. அன்புடன் வாழ்வதும் அறிவுடன் எழுதுவதும்
இன்பமும் எழிலும் இருந்திடும் வாழ்வில்
3. பெரியோர் மூப்பை பேணியே நடந்தால்
அரிய நம் செயலை அறிவுலகம் மதிக்கும்
4. சிறுவர்கள் நாங்கள் சிந்தனை விழிப்பில்
அறு சுவையூட்டும் அம்மாவைத் துதிப்போம்
5. வறுமையில் உழலுட் வறியோரை நாங்கள்
மறுமையின் வாழ்வில் மீண்டிட சேர்ப்போம்

**ஆக்கம்**
அனிஸ்ரன்
அரும்புகள் சிறுவர் கழகம்

# இனியும் நீ வரவேண்டாம் சுனாமியே

நெஞ்சம் துடிக்குதம்மா
நெருப்பாய் கொதிக்குதம்மா
வஞ்சம் தீர்த்தவளே கடல் தாயே
நெஞ்சம் பொறுக்கலையே

ஆழிக் கடலின் அலை மகளே
ஆர்ப்பரித்து வந்ததென்ன
ஆருயிர்கள் உயிர் குடிக்க
ஆசையாய்க் கொன்றாயே!

துள்ள வந்த அலைமகளே
துக்கம் தீர்த்த கலைமகளே
உன்னில் உழன்ற படகுகளை
துவசம் செய்ய நினைத்தாயே

கடல் நீரே உன்னிலிருந்து
கடல் உப்பை எடுத்ததனால்
நம் கண்ணீர் உப்பை உன்னில்
கடலே நீ கலந்தாயே.

உயிர் குடித்த பேரலையே
உன் பெயர் சுனாமியாம்
உள்ளம் நொந்து கெஞ்சுகிறோம்
இனியும் நீ வரவேண்டாம் சுனாமியே!

**ஆக்கம்**
அ.றிஸ்பா
**தேன் தமிழ் சிறுவர் கழகம்**

# கடினம் நண்பா

நட்பு என்பது மூன்றெழுத்து உ இதை
புரிந்து கொள்வது கடினம் நண்பா!
நட்பை நாலு வரியில் கூறிட முடியாது
அதுவே கபடற்ற நட்பு
எல்லோரிடமும் காட்டும் அன்பு நட்பல்ல
ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதே நட்பு

# பூவே

இந்த வண்டுகள் வட்டமிடுவது – உன்
வாசனையாலே!
உன்னில் தேனுள்ள வரை – தான்
அதில் வாசமும் உண்டு
தேனை உண்டதும் வண்டு பறக்கிறது
நீ வாடுகின்றாயே!
இது உனக்குத் தெரியுமா? – நீ
ஒரு தடவை சொல்லி விடு பூவே!

# சமாதானம்

துடியாய்த் துடிக்கிறது
சமாதானப் புறா
சிறகிருந்தும் முடியவில்லை
பறப்பதற்கு
வாழ்வா சாவா
போராட்டம் இசையிட
காத்திருக்கின்றன கழுகுகள்
சாக்காட்டு சாம்ராஜ்ஜியம்
இன வாதத்துடன்
மத வாதம் பேசிய படி
சாம்பல் மேட்டு
நோய்களின் நடமாட்டம்
குருதியில் விளையாடிய
பிணங்கள்
குதறிடும் அவற்றின் கொண்டாட்டம்
இனமொன்றை அழிப்பதற்கான
நிறைவில் இத்தனையுள்ளும்
பொதுமையுடன் உண்மை முகங்கள்
சமாதானம் சமாதானம் என்று
சமாதானம் பேசுகின்றன

**ஆக்கம்**
உ.சுபேந்திரா
உடுப்பிட்டி

# சுனாமி

ஆழியின் அலையே
உனக்கேன்
இவ்வளவு கோபம்
கடலை நம்பி
வாழ்ந்தோரை
நீ விழுங்கி
சப்பமிட்டாயே

மக்களின் ஆசையில்
மண்ணை போட்டாயே
தோப்பாக வாழ்ந்தவர்களை
தனி மரமாக்கிவிட்டாயே
கன்றை இழந்த மரம் போல
பிள்ளை இழந்த தாயின்
அழுகைக் குரல் கேட்கிறதா உனக்கு

உனது கோபத்திற்கு
யார் தான் காரணமோ
அதற்கு ஆளாகி விட்டோம் நாம்
இரக்கம் என்பது எங்கு சென்றது உனக்கு
இறக்கை முளையா குஞ்சுகளை - உன்
இரையெனவே கொண்டாய்

இயற்கை தாயென உனை நேசித்தேன்
இனியும் வேண்டாம் அன்னையே
உன் கோரத் தாண்டவம்

ஆக்கம்
பங்குஷா
அரும்புகள் சிறுவர் கழகம

# நகைச்சுவைத் துணுக்கு

மதுபானம் அருந்திய ஒருவர் திருப்பலிக்கு சென்று தேவநற்கருணை எடுப்பது வழக்கம். இதனை அவதானித்த குருவானவர் ஒருநாள் அவருக்கு திருப்பலி வேளையில் நற்கருணை கொடுத்த போது அவர் அதனை தகாத முறையில் கடித்து உண்டு விட்டார். இதனையும் அவதானித்த குரு மறுநாள் தேவ நற்கருணைக்கு பதிலாக போதையில் மூழ்கியிருந்த அவருக்கு சட்டைப் பொத்தனை (பட்டி) கொடுத்தார். அவர் அதனை கடித்து உண்டு விட்டு திருப்பலி முடிந்தவுடன் குருவானவரிடம் போய் குருவே இன்று நீங்கள் கொடுத்த தேவ நற்கருணை ருசியாக இருந்தது. ஆனால் கடினமாக இருந்தது என்று கூறினார். குருவானவர் நான் இன்று தந்தது தேவ நற்கருணை அல்ல. அதற்குப் பதிலாக சட்டைப் பொத்தானை தந்தேன். ஏன் தெரியுமா? நீர் தேவ நற்கருணை தகாத முறையில் உட்கொள்வது திருத்தப்பட வேண்டியது என்பதற்காகவே உமக்கு தந்தேன். இனியாவது நற்கருணையை தகுந்த முறையில் உட்கொள்ளும் என்றார்.

ஆக்கம்

செ.ஜீன்கிறைஸ்ரீனா
தென்றல் சிறுவர் கழகம்

# நட்பு

கல்லூரியில் நட்புக் கொண்டோன்
காலமுழுதும் நட்பில் பற்றுக் கொண்டேன்
நட்பெனும் சொல்லுக்கு விலையுண்டோ
நட்பின் ஆழம் கண்டதுண்டோ
நட்பால் உள்ளம் இணையுமடா
நட்பிலா உள்ளம் பிரியுமடா
நட்புமக் கொள் மிளிர்ந்து பிரகாசிக்கும்
மின்குமிழ் போல உன்வாழ்வில் ஒளிதுலங்கும்
நட்பு உயிரைக் கொடுக்குமடா
நட்பு உயிரை எடுக்காதடா
நட்புக்கு சுயநலம் இருக்காதடா
நட்புக்கு ஆண் பெண் தெரியாதடா
நட்பினால் உலகை வெல்லலாமடா

நட்பு எனும் மூன்றெழுத்தில்
உறவு எனும் மூன்றெழுத்து தொடருமடா

ஆக்கம்
செ.ஜீன்கிறைஸ்ரினா
தென்றல் சிறுவர் கழகம்

# ஆழம் அறியாது காலை விடுதல்

ஒரு குரங்கு உயரமான மரமொன்றில் இருந்தது. ஆற்றில் சில மீனவர்கள் வலைகள் வீசுவதைப் பார்த்து அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் குரங்குகள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தது. மீனவர்கள் தங்கள் வலைகளை ஆற்றில் வீசி விரித்து விட்டுத் தமது இராப்போசனத்தை உண்பதற்காக சிறிது தூரம் சென்றமர்ந்தனர். மீன் பிடிப்ப வர்கள் என்ன செய்தார்களோ அதைத் தானும் செய்து பார்க்க வேண்டுமென்று குரங்கு மரத்தில் இருந்து கீழே இறங்கி வந்தது. அது மீன்பிடி வலைகளில் ஒன்றை தானும் விரிக்க முயற்சிக்கையில் அதற்குள் சிக்குண்டது குரங்கு.

வலைக்குள்ளிருந்து வெளியே வரமுடியாமல் இருந்த போது இது எனக்கு கிடைத்த சரியான தண்டனை. ஏனென்றால் மீன் பிடிப்பது பற்றி ஒன்றுமே தெரியாத நிலையில் இருக்கையில் இந்த விசயத்தில் தலையிட எனக்கு என்ன உரிமை உண்டு என்று குரங்கு எண்ணியது.

ஆக்கம்
ஜெ.கியூபேட்
தென்றல் சிறுவர் கழகம

# மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாகாது

மாணவர்கள் யார்? இவர்களின் கடமைகள் என்ன? எதை சமுதாயம் இவர்களிடம் எதிர்பார்க்கிறது? எத்துறைக் கல்வியும் அசுர வேகத்தில் வளர்ந்து விரிந்து கிடக்கின்றது. "கல்விக்கு கரையில்லை" என்று எம் முன்னோர் கூறியிருந்தார்கள். கரையில்லாத கடலாக விரிந்து கிடக்கும் கல்வி நல்லாசான்களின் துணையுடன் கல்விக்கு ஒளியேற்ற ஐயம், திரிபு இன்றிக் கற்றல் மாணவர்களின் கடமையாகும். இதை வள்ளுவப் பெருந்தகை "கற்க கசடற கற்றவை கற்ற பின் நிற்க அதற்குத் தக" என தனது குறள் மூலம் மாணவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை அறுதியிட்டுக் கூறியுள்ளார். சாதாரணமான கலைத்துறைகளுக்கே இது இலக்காக அமைந்துள்ளது. நாட்டு மக்களின் வாழ்வை வழிப்படுத்த அரசியல் அறிவு முதிர்ச்சி அனுபவத்தில், முழுமையுறாத மாணவர்கள் ஈடுபடுவது பயன் தருமா என்று உணர்ச்சி வசப்படாமல் சிந்தித்தல் வேண்டும். எனவே மாணவர்களே அரசியல் ஈடுபாடு உங்களுக்கு வேண்டாம். அரசியலை விஞ்ஞான ரீதியாக அணுகி அறியுங்கள். காலம் வரும் வரை காத்திருங்கள். கருத்துக்கள் கனமானவையானால் கனி தருமென விரைந்து ஏற்றுக் கொள்ள உலகம் காத்திருக்கிறது.

**ஆக்கம்**

க.சதீஸ்க்குமார்

**சிறகுகள் சிறுவர் கழகம்**

# பயனற்ற உரையாடல்கள்

குழந்தைகளுடனான உரையாடலின் போது பெற்றோர்கள் சலித்துப் போகின்றார்கள். ஏனென்றால், அந்த உரையாடல்கள் அவர்களுக்கு எந்தத் தகவல்களையும் தருவதில்லை. இந்தப் புகழ் பெற்ற உரையாடலைப் பாருங்கள்:

- "எங்கே போனாய்?"
- "வெளியே"
- "என்ன செய்தாய்?"
- "ஒன்றுமில்லை"

தாம் நியாயமானவர்களாக இருக்க விரும்பும் பெற்றோர்கள் விரைவிலே இத்தகைய உரையாடல்கள் எவ்வளவுக்குக் களைப்பூட்டுபவை என்பதைக் கண்டு கொள்வார்கள். ஒரு தாய் சொல்கிறாள்: "நான் எனது முகம் கறுத்துப் போகும் அளவுக்கு எனது பிள்ளையுடன் நியாயமாக நடந்து கொள்ள முயல்கிறேன். ஆனால், அது என்னைக் கவனிப்பதே இல்லை. நான் அழும் போது மட்டும் தான் நான் சொல்வதை அது கேட்கிறது......".

குழந்தைகள் பெற்றோர்களுடனான உரையாடல்களை பெரும்பாலும் எதிர்க்கிறார்கள். அவர்கள் போதனை செய்யப்படுவதை ஏதாவது சொல்லப்பட்டுக் கொண்டே இருப்பதை விமர்சிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். அவர்கள் பெற்றோர்கள் தேவைக்கதிகமாகப் பேசுவதாக உணர்கிறார்கள். எட்டு வயது டேவிட் தனது தாயிடம் கேட்கிறான்: "நான் ஒரு சின்னக் கேள்வி கேட்டால் ஏன் இப்படி நீண்ட பதிலைச் சொல்கிறீர்கள்." தனது நண்பர்களுக்கு அவன் இப்படிச் சொல்வான்: "நான் அவளுடன் கதைக்கத் தொடங்கினாலோ..... ஐயோ எனக்குப் பிறகு விளையாடவே நேரமிருக்காது!"

ஒரு குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையிலான உரையாடலைக் கூர்ந்து கவனித்தால் ஒருவர் மீது ஒருவர்

ஆச்சரியத்துக்குரிய விதத்தில் எவ்வளவு தூரம் அக்கறையுள்ளவர்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டுகொள்ளலாம். அவர்களுக்கு இடையேயான உரையாடல் தமக்குத் தாமே பேசிக்கொள்வது போன்றிருக்கும். ஒருவரது பேச்சு விமர்சனங்களையும், அறிவுறுத்தல்களையும், கொண்டதாகவும், மற்றவரது மறுப்பும் ஒப்புக்கொடுத்தலுமாக அந்த நாடக வசனங்கள் அமைந்திருக்கும். இத்தகைய உரையாடல்களின் துயரம் என்னவென்றால், அவை அன்பு இன்மையால் வருபவையல்ல. மாறாக ஒருவரையொருவர் கௌரவிக்காமையால் வருகின்றன. அறியாமையால் வருபவையல்ல, மாறாக தேர்ச்சியின்மையால் வருபவை என்பது தான்.

நமது நாளாந்த பாவனையில் உள்ள மொழி குழந்தைகளுடன் பயனுள்ள விதத்தில் தொடர்பாடப் போதுமானதல்ல. குழந்தைகளைச் நெருங்கிச் செல்லவும், பெற்றோர்களது மனக் கவலையைக் குறைக்கவும் நாம் புதிய ஒரு வழியைக் கையாள வேண்டும். புதிய முறையில் அவர்களுடன் உரையாட வேண்டும்.



பெயர் :- ..........................................................................................

முகவரி :- ..........................................................................................

..........................................................................................

பாடசாலை :- ..........................................................................................

..........................................................................................

தலைப்பு :- ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

## ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் குழு
சிறுவர் குரல் சஞ்சிகை
C/O விழி உளசமூக மேம்பாட்டு அமையம்
17/4, றெயில்வே வியூ, கச்சேரியடி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

# சிறுவர்களின் மீதான சரீர தண்டனை உண்மையில் இது அத்தியாவசிமானதா?.......

வளர்ந்தவர்கள் நான்கு காரணங்களுக்காக சிறுவர்களைத் தண்டிக்கிறார்கள்

அவை ......

* அவர்கள் ஏமாற்றத்தில் அல்லது கோபத்தில் இருக்கும் போது..........
* பிள்ளையைத் திருத்துவதற்காக
* சிறுவர்களை ஆபத்தினின்று பாதுகாக்க.........
* பல காரணங்களுக்காக சிறுவர்களைப் பழிவாங்க.

**பலவாறான நியாயங்களை நாம் கூறினாலும் பிள்ளை பிள்ளைகளை நாம் உடல் ரீதியாகத் தண்டிக்கக்கூடாது**

ஒரு பிள்ளையை அடிக்கும் போது அப்பிள்ளைக்கு.....

வேதனை
அவமானம்
பதகளிப்பு
ஆத்திரம்
வஞ்சம் தீர்க்கும் எண்ணம் ஆகியன ஏற்படும்

உடல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்ட பிள்ளைகள் வளர்ந்தபின்னர் வன்முறையான சமூக விரோத நடத்தைகளைக் காண்பிக்கிறார்கள். அவர்களே தமது வாழ்க்கைத் துணை, பிள்ளை ஆகியோர் மீது வன்முறையை பிரயோகிக்கிறார்கள். அத்துடன் அவர்கள் பல்வேறு துஸ்பியோகங்களுக்கும் ஆளாகிறார்கள

சரீர தண்டனைக்குப் பதிலாக வேறு வடிவங்களிலான அவமானப்படுத்தும் தண்டனைகளையும் வழங்குவது சரியல்ல.

## பிள்ளைகள் மீதான தண்டனைகளை உடனே........

# நிறுத்துங்கள் .....!

தகவல்
விழி உளசமூக மேம்பாட்டு அமையம்
17/4, றெயில்வே வியூ, கச்சேரியடி, சுண்டுக்குளி, யாழ்ப்பணம்